ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை

பிரமாதீச
ஆடி

ஆகஸ்ட்
1973



தொகுதி 35
பகுதி 8

Vol. 35
No 8

ஆசிரியர் & பிரசுரகர்த்தா

வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

சுகாதாரப்ரச்னை ... 141

சில யூனானி மருந்துச் சரக்குகள் ... 145

புற்று நோய் ... 149

இடத்திற்கேற்ப வாயு காட்டும் குறிகள் ... 153

வருஷச் சந்தா
ரூ 5/-

Annual
Subscription
Rs 5/-

காரியாலயம்: 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

# வைத்யரத்னம் P. S. வாரியருடைய

# ஆர்ய வைத்தியசாலா

## கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered Trade Mark.

**தலைமை ஆபீஸ் போன்: கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்**
**ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன்** போன் நெ. 31
**நர்ஸிங்ஹோம்** போன் நெ. 44
**தலைமை வைத்யர்** போன் நெ. 25
**மானேஜிங் டிரஸ்டி** (வீடு) போன் நெ. 27
(ஆபீஸ்) போன் நெ. 61
**மானேஜர்** (வீடு) போன் நெ. 26

**சென்னை கிளை:**

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
**நுங்கம்பாக்கம், சென்னை 34.** போன் எண 811275

**மற்ற கிளைகள்:**

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

**மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்**

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும் எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜுபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

**மானேஜிங் டிரஸ்டி.**
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.



ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை

| | | |
|---|---|---|
| தொகுதி 35 | பிரமாதீச - ஆடி | பகுதி 8 |
| Vol. 35 | ஆகஸ்ட் 1973 | No. 8 |


श्री धन्वन्तरये नमः

## சுகாதாரப்ரச்னை

பொது சுகாதாரம், தனிப்பட்ட மனிதனின் சுகாதாரம் இவ்விரண்டிற்காகக் கையாளப்படும வழிகளில் தற்சமயம் சில புதிய பிரச்னைகள் எழுந்திருக்கின்றன. இப்பிரச்னைகள் நமது வழிகளிலுள்ள அடிப்படைத்தவற்றை நன்கு வெளிக்காட்டுகின்றன. இயற்கை வலுவிலே அளிக்கும் இந்தப் பாடத்தை ஆழ்ந்து கவனிப்பது மிக அவசியம்.

பொது சுகாதாரத்திற்கு யார் பொறுப்பு? தனிப்பட்டவனின் சுகாதரத்திற்கு யார் பொறுப்பு? பொது சுகாதாரத்திற்கேற்ப தனிப்பட்டவனின் சுகாதாரத்தை அமைப்பதா? தனிப்பட்டவனின் சுகாதாரத்திற் கேற்ப பொது சுகாதாரத்தை அமைப்பதா? இரண்டிற்கும் பரஸ்பரம் முரண்பாடு ஏற்படுவது ஸாத்யமா? முரண் ஏறபடின் எதைப் பிரதானமாகக் கருதுவது? என்பதே இன்றைய புதிய பிரச்னை.

கொசு, ஈ, மூட்டைப்பூச்சி இவை இன்று நேற்று ஏற்பட்ட புதியதொரு விளைவு அல்ல. அதனுல் ஏற்படும் முறை ஜ்வரம்

யானைக்கால் கிரந்தி போன்ற நோய்களின் உபத்ரவங்களும் அனந்தம். இந்நிலையைத் தவிர்க்க இதுவரை பல் வேறு உபாயங்கள் கையாளப்பட்டன. சமீபத்தில் சுகாதார இலாகா கையாண்ட உபாயத்தால் ஈக்களும் கொசுக்களும் ஒருவாறு ஒழிந்தன என்று பொது ஜனங்கள் பெருமூச்சுவிடும்போது, வேறு புதிய வழியில் இவைகளின் தொந்தரவு அதிகமாகியது ஈக்களை யும் கொசுக்களையும் அழிக்கும் மருந்து தன் சக்தி இழந்ததையும் அம்மருந்துகளை தாங்கிக் கொண்டு வளர்ச்சி பெறும் சக்தியை ஈக்களும் கொசுக்களும் அடைந்ததையும் கண்டோம், பொதுவாக ஈக்களும் கொசுக்களும் இயற்கையளவிற்கு மீருமல் அவைகளின் பெருக்கைக் குறைத்து வந்த இயற்கை எதிரிகளான பல்லி முதலியவை சுகாதார முறை மருந்துகளால் அழிந்து ஈ கொசு இனப்பெருக்கம் தடையுருது நடைபெற்று ஈக்களையும் கொசுக் களையும் கண்டு எல்லை தாண்டி ஓடும் பயங்கர நிலை ஏற்பட்டுள்ளது. டைபாய்டு, பிரவாஹிகை, குளிர்ஜ்வரம், யானைக்கால் இவைகளின் கடுமையும் சகிக்கமுடியாதாகி விட்டது.

இயற்கை, மனித குலத்தை மாத்திரம் உலகில் தோற்றுவிக்க வில்லை. ஒவ்வொரு ஜீவஜந்துவும் உலகின் வாழ்வில் தனிப்பட்ட காரியத்திற்காகவே இயங்குகின்றன. இவைகளில் ஒன்று மற்ருென்றைத் தாக்கியே வாழ்வதும் இயற்கையளித்த சக்தியே.

ஈக்களும் கொசுக்களும் நமக்குக் கொடுக்கும் தொந்தரவு சகிக்க முடியாதது தான். அவைகளிலிருந்தும் நமமை பாது காப்பது அவசியம் தான். அதற்காக அந்த இனத்தையே அழிக்க முற்படுவது முறையற்றது நமது சூழ்நிலையை அவை பாழ்படுத்தா திருக்க வகை காணுவதன் மூலம் நல்ல தற்காப்பைப் பெறுவது தான் சரியான முறை. இங்குதான் பொது சுகாதாரத்திற்கும் தனி சுகாதாரத்திற்கும் உள்ள பேதத்தை நாம் நன்கு புரிந்து கொள்ள முடியும்.

கொசுவின் உற்பத்திஸ்தலமான சாக்கடைகளிலும் நீர்த்தேக் கங்களிலும் அவை உற்பத்தியாகாமலும் தங்காமலுமிருக்க சில விஷமருந்துகளைத் தெளிப்பதன் மூலம் கொசுவை வெளியிலிருந்து வீட்டிற்குள்ளே விரட்டி அங்கு உற்பத்தியாகவும் வளரவும் அனுமதிக்கிறோம். இது ஈ, கொசுத்தாக்குதலின் முதல் முனையில் ஏற் படும் விளைவு. சாக்கடையில் தங்க வசதி பெறுத கொசு அதற்கு இயற்கையான உயிர்ப்பற்று காரணமாக வீட்டிலுள்ள சூழ்நிலைக் கேற்ப தனது வாழ்க்கை முறையை மாற்றி அமைத்துக்கொள் கிறது. அப்போது தான் மனித இனத்திற்கு அது நேரிடை

எதிரியாக மாறுகிறது. மனிதன், இவ்வெதிரியை வீட்டினுள்ளும் எதிர்க்க உணவு படுக்குமிடம் குழந்தைகள் விளையாடுமிடம், தான் குடிக்கும் ஜலம் என்று கூட சிந்தியாமல் எல்லாவற்றிலும் கொசு ஈக்களைக் கொல்லும் விஷபதார்த்தத்தைத் தெளித்து நேரிடையாகத் தாக்குகிறுன், விஷபதார்த்தங்களே தனக்கு எதிரியாகும் ஒரு விபரீத விளைவையும் கண்டு கலங்குகிறுன். முடிவில் இது இரண்டாவது முனையில் ஏற்படும் விளைவு.

இந்த விபரீத கதியின் காரணம் யாது? சற்று சிந்திக்க வேண்டியது மிக அவசியம். நாட்டின் பொருளாதார நிலையில் போல சில அம்சங்களை தனியார்துறை எனக் கொண்டு ஏற்படுத்திக் கொண்ட பாகுபாட்டின் விளைவு இது. பொது சுகாதாரத்தை சர்க்காரும், தனிசுகாதரத்தை மக்களும் பிரித்துக்கொண்டுள்ளனர். தனிசுகாதாரத்தைக் கவனித்துப் பார்க்க வசதியோ, அவசிய உணர்வோ, அதைப்பற்றிய பிரசாரமோ ஒன்றுமில்லாதிருப்பதால் சர்க்கார் துறையான பொது சுகாதாரத்திற்காகச் செய்யப்படும் முறைகள் அனைத்தும் கெடுதலையே விளைவிக்கின்றன. பொது சுகாதாரவிதிகளை அமுலாக்கும் போது ஏற்படும் நிர்ந்தத்தில் சில இடங்களில் மக்கள் தனிப்பட்ட சுகாதார வாழ்வையும் கெடுத்துக் கொள்கின்றனர். இதை மாற்றியமைப்பதே இன்றைய சுகாதார பிரச்னைக்குத் தகுந்த வழியாகும்.

இந்தியப் பண்பாடு இங்கு ஒரு நல்ல வழியைக் காட்டுகின்றது. அகத்தூய்மை புறத்தூய்மை வெளிப்புறத்தூய்மை என்று மூன்று வகையாக சுகாதார ஹேதுவான தூய்மையைப் பிரிக்கலாம். அதில் அகத்தூய்மை முதலிலும் புறததூய்மை பின்னும் வெளிப்புறத் தூய்மை மூன்ருவதாகவும் எடுத்துக் கொள்ளப்படும் இவ்வரிசையை சுகாதாரத்திலும் கையாண்டால் நாடு சீரடையும்.

முதலில் தனிமனிதன் தனது தனிப்பட்ட சுகாதாரத்தைப் பாதுகாப்பது, தனக்கெனத் தனியாக வகுத்துக் கொண்டுள்ள வீட்டுச் சூழ்நிலையை தூய்மையாகப் பாதுகாத்துக்கொள்வது. பிறகு தான் வாழும் சமூகத்தின் சூழ்நிலையை சுத்தமாக்குவது என்ற அடிப்படையில் நாட்டின் சுகாதாரம் அமைக்கப்பட வேண்டும். அப்போதுதான் தனி சுகாதாரத்திற்கும் பொது சுகாதாரத்திற்கும் நடுவே ஏற்படும் முரண்பாடுகள் விலகும். தனிப்பட்ட சுகாதாரத்தை அனுஸரித்து பொது சுகாதாரம் வகுக்கப்படவேண்டுமே தவிர பொது சுகாதாரத்திற்கேற்ப தனி சுகாதாரத்தை வகுப்பது அர்த்தமற்றது. பொது சுகாதாரத்திற்கும்

தனி சுகாதாரத்திற்கும் வேற்றுமை உண்டு என நாம் கருத வில்லை. ஆனால் எதை முதலில் கவனிக்க வேண்டும். எங்கிருந்து இதை ஆரம்பிக்க வேண்டும் என்ற இரு வழிகளில் தான் கருத்து வேறுபாடு ஏற்படுகின்றது. சுகாதாரத்தில் தனியார் துறை பொதுத்துறை என்ற பாகுபாடின்றி தனி சுகாதாரத்தில் முதலில் கவனம் செலுத்தி அவனவன் சூழ்நிலையைத் தூயதாக்கிக் கொள்ள வசதியும் மனப்பான்மையும் ஏற்படும்படி சர்க்கார் வழி வகுக்க வேண்டும். இதனால் பொது சுகதாரமும் தானே சீர்படும்.

தனிமனிதன் தன்னகத்தையும் புறத்தையும் தூயதாக்கிக் கொள்வதன் மூலம் சமூகத்தின் சூழ் நிலையையும் தூயதாக்கி கொள்ள முடியும். இந்த வழியில் ஈயும் கொசுவும் மனிதனுக்கு எதிரிகளாகமாட்டா. மனிதன் ஈயையும் கொசுவையும் கண்டு பதறும் நிலையும் ஏற்படாது.

இதைப் பொது மக்களும் சர்க்காரும் ஆழ்ந்து சிந்திப்பது அவசியம்.


# நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்

N. வைத்யநாதன், R. M. P.

# சில யூனானி மருந்துச் சரக்குகள்

மருந்துச் சரக்குகள் விஷயத்திலோ அவைகளின் செய்கையிலோ ஆயுர்வேதம் சித்தம் யூனானி அலோபதி என்ற மாறுபாட்டிற்கிடமில்லை. சுக்கு ஆயுர்வேதத்திற்கு தனியான உரிமையல்ல. அதுபோன்ற ஆயுர்வேதச் சரக்குகள் சித்த மூலிகை, யூனானி மூலிகை என்ற பாகுபாடு ஒருவகையில் அர்த்தமற்றது. எனினும் யூனானி வைத்திய ஸம்பிரதாயத்தை அனுசரிப்பவர்கள் சில சரக்குகளை அதிகமாகக் கையாளுகின்றனர்; ஆயுர்வேத வைத்தியர்கள் சில சரக்குகளை அதிகமாகக் கையாளுகின்றனர் என்ற வழக்கையொட்டி யூனானிச் சரக்கு, ஆயுர்வேத மூலிகை என்ற பெயர் பொருளுள்ளதாகின்றது. கோஜிஹ்வா என்ற மூலிகை நமது நிகண்டு கிரந்தங்களில் அதிகமாகக் காணப்படினும் யூனானி முறையில்போல அதன் உபயோகம் ஆயுர்வேதமுறையில் காணோம், அம்மாதிரியே மணத்தக்காளிக் கீரையை ஆயுர்வேத வைத்தியர்கள் உபயோகிப்பதுபோல யூனானி வைத்தியர்கள் அதிகமாக உபயோகிப்பது இல்லை. அவ்விதமே மணத்தக்காளி விதையை யூனானி வைத்தியர்கள்போல ஆயுர்வேத வைத்தியர்கள் உபயோகிப்பதில்லை இதெல்லாம் அவரவர்கள் அனுபவத்தை ஒட்டிய பழக்கத்தை காரணமாகக் கொண்டது

யூனானி சரக்குகளில் சிலவற்றை இன்று ஆயுர்வேத வைத்தியர்கள் அதிகமாகக் கையாளுகின்றனர். அவைகளைப் பற்றிய குறிப்பே இக்கட்டுரையின் விஷயமாகும். இவைகளில் சில ஆயுர்வேத மூல கிரந்தங்களில் இடம் பெறுபவையே.

காவ்ஜபான் (கோஜிஹ்வா), பனப்ஷா, ஜூபா, இஸப்கோல் அஸாரூன், ஸப்ஜா, ஜத்வார், ஜஹரமோஹரா, கஹரூபா, ஸங்கேயசப் போஸ் றவை வைத்தியர்களால் மிகவும் கையாளப் படுகின்றன. அவைகளைப்பற்றிய எல்லா விவரத்தையும் அறிவது வைத்தியர்களின் சிகித்ஸா யுக்தி நிர்ணயத்தில் மிகவும் உதவும் என்பதில் ஸந்தேகமில்லை.

1. கோஜிஹ்வா—காவுஜபான்

காவுஜபான் இரண்டு விதமாக தமிழ்நாட்டுக் கடைகளில் கிடைக்கிறது. பர்க் காவுஜபான் அல்லது காவுஜபான் என்ற இலை. குலெ காவ்ஜபான் என்ற பூ ஸம்ஸ்கிருதத்தில் கோஜிஹ்வா, கோஜீ; ஹிந்தி, மராட்டி, குஜராத்தியில் காவுஜபான். அராபியில் லிஸா நுஸ்ஸௌர். லேடினில் ஆனேஸ்மா பாக்டிரடம் என வழங்குகின்றது. உற்பத்தி ஸ்தானம் - ஹிமாலயத்தில்.

காச்மீரத்தில் குமாயூன் மலைத்தொடர் வரை. இரானிலும் ஆப்கானிஸ்தானத்திலும் உண்டாகும் காவ்ஜபான் இந்தியச் சரக்கை விடத் தரத்தில் உயர்ந்தது. இரானில் உற்பத்தியாவது மிகவும் உயர்ந்தது.

வருஷம் முழுவதும் பசுமையுடன் 1—2½ உயரம் உள்ள செடி, இலை முட்டைவடிவத்தில் தடித்து பிளவு இல்லாமல், மேல் ஜவ்வரிசி அல்லது மணல் போன்ற சுரசுரப்பான முடிச்சுகளுடன் காணும். செடி, இலை எங்கும் மேல் அடர்ந்து மயிர் போன்ற அமைப்பு. தேள்கொடுக்கு போன்று வளைந்து ஐந்து இதழுடனுள்ள பூ. ஆணுகில் கேஸரம் ஐந்திருக்கும். பெண்ணுகில் ஒன்று தான். புஷ்பம் வாடியதும் நிறம் மாறி கருஞ்சிவப்பாக இருக்கும். இதன் பூ தான் அதிகமாக மருந்துகளில் உபயோகமாகிறது இலையும் செடி முழுவதும் கூட மருந்தாகின்றது.

சுவையில் துவர்ப்பு கசப்பு இனிப்பு; விபாகத்தில் இனிப்பு; வீர்யத்தில் சீதம்; வாயுவை உண்டாக்கும்; மலத்தைக் கட்டும்; ஹிருதயத்திற்கு நல்லது; எளிதில் ஜீரணமாகும். கப பித்தங்களைப் போக்கும். காஸம், அருசி, ச்வாஸம், பிரமேஹம், ரத்த விகாரம், விரணம், ஜ்வரம் இவைகளைப் போக்கும். முக்கியமாக சித்தப்பிரமை, உந்மாதம், ஹிருதய படபடப்பு இவைகளில் மிகவும் உபயோகமானது. ரத்த சுத்தி செய்வதற்கும், சிறுநீரைப் பெருக்குவதற்கும், புஷ்டியளிப்பதற்கும் இதை உபயோகிக்கின்றனர். கீல்வாயு, வெட்டை, வெண்குஷ்டம், ஆண்மையின்மை இவைகளில் நல்ல துணை மருந்து மூத்திராசய நோய்களில் இதன் உபயோகம் நல்ல குணமளிக்கிறது. ஹிருதய படபடப்பை சீராக்குவதில் மிகவும் நல்லது.

ஸங்கேசயப் கஹ்ரூபா போன்றவைகளைப் பிஷ்டி செய்ய இதன் அர்க்கத்தை உபயோகிக்கின்றனர்.

காவுஜபான் ஸர்பத்: காவுஜபான் 5 தோலா, நீலோத்பலக் கிழங்கு* 4 தோலா, உஸ்துகுத்துஸ், ரோஜாப்பூ, மல்ஃபி, காசினி

---

* நீலோத்பலக் கிழங்கு அல்லது நீலோத்பலப் பூவின் இதழ்களுக்கு ஹிருதயத்தில் டிஜிடாலிஸ் போன்ற சக்தி உண்டு. நாள் பட்ட ஜ்வரம் முதலிய நோய்களில் நாடித்துடிப்பு ஹிருதய மாம்ஸ பேசிகளின் பலக்குறைவால் தளர்ந்து காணும். அங்கு இது நல்ல குணமளிக்கிறது தாமரை அல்லது நீலோத்பலக் கிழங்கு அல்லது பூவை பாண்ட கஷாயமாகவோ, கஷாயமாகவோ போட்டு அல்லது மற்ற ஜ்வர ஹர கஷாயச் சரக்குகளுடன் சேர்த்து இதையும் போட்டுக் கஷாயம் செய்து சாப்பிட ஹிருதயம்

விதை, வெண்சந்தனம், ஏலம், வகைக்கு 2 தோலா இவைகளை 2 படி ஜலத்தில் ¼ படி மீதமாகக் கஷாயமிட்டு 80 தோலா சர்க்கரை சேர்த்துத் தயார் செய்த பானகம் ஹிருதயத்ரவம் எனும் ஹிருதய படபடப்பில் மிகச் சிறந்தது. மூத்ராசய நோய்களையும் போக்குகின்றது. ரத்தத்தையும் சுத்தி செய்கின்றது. சளி இருமலிலும் இதன் ஸர்பத் நல்லது.

வாய் வேக்காளத்தில் காவ்ஜபானைப் பானையிலிட்டு மூடி அந்தர்தூமமாக எரித்தெடுத்த கரியைத் தேன் விட்டரைத்து நாக்கிலும் வாயிலும் தடவிக்கொள்ள எரிச்சல் உடன் அடங்கும். புண் ஆறும்.

மற்றும் கமீரே காவ்ஜபான் என்ற ஸர்பத், காவ்ஜபான் சூர்ணம் போன்ற யோகங்கள் மிகவும் பிரசித்தமானவை. அவைகளை யூனனி யோகத் தொடரில் பின்னர் வெளியிடுகிறோம்.

2. பனப்ஸா—காம புஷ்பம்

ஸம்ஸ்கிருதத்தில் ஸித்த பேஷஜ மணிமாலையில் இதை பனப்ஸா, பனப்ஸிகா என்றே குறிப்பிடப்படுகிறது. மஹா மஹோபாத்யாய பாகீரத ஸ்வாமி காம புஷ்பம், வனேசம், ஆராம புஷ்ப ராஜம் என்ற பெயரில் குறிப்பிடுகிறார். ஹிந்தி, குஜராத்தி, மராட்டியில் பனப்ஸா. அராபி பனப்ஸஜ், ஆங்கிலத்தில் ஸ்வீட் வயலெட். லாடினில் வயலா ஆடோரேடா.

உற்பத்தி ஸ்தானம்—இரான், ஹிமாலயம், காச்மீர். ஹிமாலயத்தில் 5,000 அடிக்கு மேல் இது தானே அடர்ந்து வளர்கின்றது. சில இடங்களில் பயிரிடப்படுகின்றது.

பனப்ஸா செடி 4, 5 அங்குல உயரமுள்ளது. இலை வட்டமாக ஹிருதயம் போன்றும் பிரமியிலை போன்றும் மயிர் உள்ளதாகவும் காணப்படும் பூ நாவல்பழ நிறத்தில் கொத்துக்கொத்தாக இருக்கும். பூவிலிருந்து நல்ல மணம் பரவி நிற்கும். பூ வாடியதும் நீல நிறத்தில் காணும். கடையில் பனப்ஸாவின் செடி முழுவதும் பனப்ஸா என்ற பெயரிலும், வேர் பிகே பனப்ஸா என்றும், பூ குலே பனப்ஸா என்றும் கிடைக்கின்றது. ஆனால் பனப்ஸாவின் வேருக்கு பதிலாக இரஸா வேர் மாற்றிக் கொடுப்பதும் உண்டு.

---

பல மடையும். ஹிருதய படபடப்பு அடங்கும் அநேகமாக ஜ்வரஹர கஷாயங்களில் அதிலும் பித்தப் பிரதான நிலையில் நீலோத்பலமோ தாமரையோ அதிகமாகக் காணலாம்.

## பூ, பஞ்சாங்கம், வேர் மூன்றும் மருந்துச்சரக்காகும்

வீர்யத்தில் சீதம், மிருது, பித்தஹரம், ரத்தப் பிரஸாதகம், ஸ்னேஹனம், தூக்கமளிக்க வல்லது. தொண்டை, மார்பை மிருதுவாக்கும். ஜ்வரம், அபஸ்மாரம், வீக்கம், தாகம் இவைகளை போக்கும். அதிமதுரத்துடன் இதை அரைத்துப் பத்துப்போட வீக்கம் குறையும்.

பனப்ஸாவை நன்கு சூர்ணம் செய்து 8 பங்கு வெந்நீரில் இரவு ஊறவைக்கவும். காலையில் $\frac{1}{8}$ பங்கு மீதமாகக் கஷாயமாக்கி வடிகட்டி 2, 3 பங்கு சர்க்கரை சேர்த்து ஸர்பந் தயாரித்துக் கொள்ளவும். பித்த ஜ்வரத்தில் நாவரட்சி, எரிச்சல் அதிகமாக இருக்கும்போது இதைக் கொடுக்க அவை சமனமடைந்து ஜ்வரமும் குறையும். கசப்புக் கஷாயம் சாப்பிட விரும்பாத நோயாளி, குழந்தை கர்ப்பிணி போன்றவர்களுக்கும் காங்கை மிக்கவர்களுக்கும் இது அதிக ஹிதமானது.

குலே பனப்ஸா, காவ்ஜபான், ஜூபர், காசினி விதை, அதிமதுரம், நன்னாரி, சீந்திற்கொடி, வேப்பம்பட்டை உள்பக்கம், கடுகுரோஹிணி, நிலவேம்பு, தான்றிக்காய் தோல், நெல்லிமுள்ளி, கடுக்காய் தோல் இவைகளின் கஷாயம் கபஜ்வரம், நாள்பட்ட தலைவலி, நாள்பட்ட ஜ்வரம், (கபத்துடன்) நாள்பட்ட இருமல், சிறு குழந்தைகளுக்கு வரும் ஜ்வரம் இருமல் இவைகளில் நல்லது.

குலே பனப்ஸாவைக் கொண்டு குல்கந்து செய்வதுண்டு. உஷ்ண நோய்களிலும் வெய்யில் நாட்களிலும் ஆப்கனிஸ்தானிலிருந்து வருவதைவிட காச்மீரத்தில் கிடைப்பதுதான் குல்கந்து செய்வதற்கு நல்லது. காச்மீரத்தில் உத்பத்தியாவதில் பூவில் விஷ சக்தி கிடையாது. ஈரான் ஆப்கனிஸ்தானத்தில் கிடைப்பதில் ஒருவித விஷ சக்தி உண்டு அதனால் அவைகளைக் கொண்டு குல்கந்து தயாரிப்பது நல்லதல்ல — என்று ஸ்ரீ பாகீரத ஸ்வாமி சொல்கிறார் குல்கந்து மல பந்தத்தில் நல்லது.

புற்று நோயில் பனப்ஸாவின் பஞ்சாங்கத்தைக் கஷாயமாக்கிச் சாப்பிடலாம். அரைத்து மேலுக்குப் பூசலாம். வலியும், ரத்தப் பெருக்கும் இதனால் குறைகிறது. பஞ்சாங்கத்தின் கஷாயத்தில் புண்ணை அலம்பலாம். இது நல்ல குணம் தரும் என்று தமது அனுபவத்தை பாகீரதஸ்வாமி எழுதுகிறார்.

உஷ்ணத்தால் ஏற்படும் தலைவலியிலும், தூக்கமின்மையிலும் இதை அரைத்துத் தலைக்குப் பத்துப்போடலாம். தலைவலியில் இதன் சூர்ணத்தை மூக்கில் வைத்து உறிஞ்சுவதுமுண்டு.

# புற்றுநோய்

(முன் தொடர்ச்சி)

வைத்ய V. S. பஞ்சநத சர்மா, திருச்சி.

"மஹத்து க்ரந்திதோ அர்புதம்" என்றபடி க்ரந்தியைவிட உருவத்தில் பெரியதாக அர்புதம் காணப்படுவதாலும், மற்ற எல்லா விதத்திலும் ஒற்றுமை இரண்டிற்கும் இருப்பதாலும் க்ரந்திக்குப் பிறகு அர்புதம் விளக்கப்படுகிறது.

க்ரந்த்யர்புதானும் சயதோ அவிசேஷ: ப்ரதேச ஹேத்வாகிருதி தோஷதூஷ்யை : | ததஸ்சிகித்ஸேத் பிஷுகர்புதானி விதானவித் க்ரந்தி சிகித்ஸிதேன || (சரக)

அர்புதே க்ரந்திவத் குர்யாத்-யதாஸ்வம் ஸூதராம் ஹிதம் || (அஹ்) என்றபடி க்ரந்தி அர்புதம் இரண்டுக்கும், வரும் இடங்கள், காரணங்கள்-உருவம் வாதாதி தோஷங்கள், ரத்தம்-மாம்ஸம் முதலியவைகளின் ஒற்றுமையால் க்ரந்திக்குச் சொன்ன சிகித்சை முறைகளையே செய்யவேண்டும் என கூறப்பட்டுள்ளது.

வாத-பித்த-கபங்கள் கேடுற்று சரீரத்தில் ஏதோ ஓர் இடத்தில் மாம்ஸத்தைக் கெடுத்து உருண்டையாகவும், கடினமானதாகவும், தாங்கக்கூடிய வலியுடனும், பெரியதாகவும், கீழிருந்து வெளிக்கிளம்புவதாகவும், நீண்டநாட்கள் சிறுகச்சிறுகப் பெருத்தும், பழுத்து உடையாமலும் இருக்கும் கட்டிக்கு அர்புதம் என்று பெயர்.

வாதம்-பித்தம்-கபம், ரத்தம், மாம்ஸம், மேதஸ் ஆகியவைகளால் ஆறுவிதமாக அர்புதம் உண்டாகிறது.

இவைகளுக்குள் ரக்தஜ அர்புதத்தில் காணப்படும் ரத்தம்-ஸிரைகள்-வாதாதி தோஷங்களால் பீடிக்கப்பட்டு ரத்தப் பெருக்குடன், மாம்ஸாம்குரங்கள் வளர்வதும் ரக்தக்ஷயம் உண்டாகி சோகை உண்டாவது போன்ற அறிகுறிகள் புற்றுநோயில் காணப்படுவதுடன் அஸாத்யமானதாகவும் சொல்லப்படுகிறது.

அர்புதங்களுக்கு சிகித்சை சொல்லும்பொழுது "அர்புதே க்ரந்திவத்குர்யாத்யதாஸ்வம்-ஸூதராம் ஹிதம்" என்று சுருக்கமாகப் பொதுவாக வாக்படர் சொல்லி இருக்கிறார். ஆனால் ரக்தஜ அர்புதத்தில் சிகித்சை கிரமம் சொல்லும்பொழுது "ரக்த வித்ரதிவத்கார்யா சிகித்ஸா சோணிதார்புதே" என்றும் "பித்த வித்ரதிவத்ஸர்வா : க்ரியா நிரவசேஷத: வித்ரத்யோ: குசல: குர்யாத் ரக்தாகந்து நிமித்தயோ: என்ற வாக்யப்படி ரக்தஜ வித்ரதிக்

குண்டான சிகித்ஸைகளை ரக்தஜ அர்புதத்துக்கும் ரக்தஜவித்ர திக்கு பித்த ஜவித்ரதியின் சிகித்ஸைகளையும் செய்யும்படி சொல்லப்பட்டிருக்கிறது. பைத்திகவித்ரதிக்கு, க்ஷீரகாகோலீ; விளாமிச்சம்வேர்; அதிமதுரம், சந்தனம் இவைகளை நெய் தேன் சேர்த்து குழப்பி லேபம செய்யவேண்டுமென சர்வஸாதாரண வைத்ய சிகித்ஸை மட்டும் சொல்லப்பட்டுள்ளது. புற்றுநோய் இந்த சாதாரண சைத்யோப சாரத்தால் சமனம் அடைவதாகத் தெரியாததால், ரக்தஜ அர்புதம் என்றும் சொல்லமுடியவில்லை.

அர்புதங்களுக்குள் அஸாத்ய லக்ஷணங்கள் சொல்லுமிடத்து "தேஷ்வஸ்ருங்மாம்ஸஜே வர்ஜ்யே சத்வார்யன்யானி ஸாதயேத் (அ. ஹி.) என்று ரக்தஜ-மாம்ஸஜ அர்புதங்களை அஸாத்யமானதாகவும்; இவ்விரண்டுக்குள் "மாம்ஸஜானும்து ஸம்சுத்தி சஸ்த்ர க்ஷாராக்னி கர்மச'' என்று மாம்ஸஜ அர்புதத்தில், சஸ்த்ரசிகித்ஸை அக்னிசிகித்ஸைகள் புற்றுநோய்க்குள்ளதுபோல் காணப்படுகிறது. ஆனால் புற்றுநோய்க்குள்ள கம்பீரமான நிதான லக்ஷணங்கள் மாம்ஸஜ அர்புதத்தில் காணப்படாததால் மாம்ஸஜ அர்புதம் என்றும் சொல்ல இடமில்லை.

அடுத்தபடியாக வித்ரதியின் பிரிவை ஆராயும்போது வித்ரதியின் நிதானம், பாகுபாடுகளில் சில புற்றுநோய்க்குள்ளதுபோல் ஒற்றுமை காணப்படுகிறது. "த்வக்ரக்த மாம்ஸ மேதாம்ஸி ப்ரதூஷ்யாஸ்த்தி ஸமாச்ரிதா: | தோஷா: சோபம் புனர்கோரம் ஜாயந்த்ய ச்ரிதா ப்ருசம் || மஹாசூலம் ருஜாவந்தம் வ்ருத்தம் சாப்யதவாயதம் | தமாஹு: வித்ரதிம் | அஸ்த்யாச்ரிதமான வாதாதி தோஷங்கள் தோல், ரத்தம், மாம்ஸம் – மேதஸ்களைக் கெடுத்து மிகவும் பயங்கரமாயும் பொறுக்கமுடியாத வேதனையுடனும் பல உருவங்களுடனும், உயர்ந்தும் நாளடைவில் வெளிக்கிளம்புவதாகவும் உள்ள வீக்கத்தை வித்ரதி என்று குறிப்பிடப்படுகிறது. கண்களுக்கு புலப்படும்படி சரீரத்தில் மேல்புறம் உண்டாவது "பாஹ்யம்", கண்களுக்குப் புலப்படாமல் சரீரத்தின் உள் அவயவங்களில் உண்டாவது "ஆப்யந்தரம்'' என இரு வகையாகப் பிரிக்கப்படுகிறது. இவைகளுக்குள் பாஹ்யவித்ரதி வாத-பித்த-கபம் தனித் தனியாகவும்; மூன்று தோஷங்கள் சேர்ந்து ஸந்நிபாதமாகவும்; வெளியில் அடிபட்டு வருவது; ரத்தம் கெட்டு வருவது ஆக ஆறு விதமாகப் பிரிக்கப்படுகிறது. இவைகளுக்குள்ளும் ரத்தம் கெட்டு வரும் வித்ரதியில் "க்ருஷ்ணஸ்போடாவ்ருத: ச்யாவ: தீவ்ர தாஹ்ருஜாஜ்வர: | பித்த சித்ரதிலிங்கஸ்து ரக்தவித்ரதிருச்யதே; || என்ற சுச்ருதர் வாக்யப்படி எரிச்சல் குத்துவலி காய்ச்சல் கருத்ததாகவும் பழுப்பு நிறம் உள்ளதாகவும் கொப்பளங்கள் சூழ்ந்து காணப்படுவது, மற்றும் பித்த வித்ரதிக்குண்டான

லக்ஷணங்களும், புற்றுநோயில் காணப்படுகின்றன. இதைவிட, ஆப்யந்தர வித்ரதி வருவதற்குள்ள காரணங்கள், உருவம்: வரும் இடங்கள் ஆகியவற்றை நோக்கும்பொழுது இதுதான் புற்று நோயாக இருக்கவேண்டும் என நினைக்கவேண்டும். சுச்ருதரின் வாக்கியத்தைப் பார்ப்போம். "குர்வஸாத்ம்ய விருத்தான்ன சுஷ்க்க ஸங்க்லிஷ்டபோஜனுத் | அதிவ்யவாய - வ்யாயாம - வேகாகாதவிதாஹிபி : || ப்ருதக் ஸம்பூய வாதோஷா : குபிதா குல்மருபிணம் | வல்மீகவத்-ஸமுத்பன்னம்-அந்த : குர்வந்தி வித்ரதிம் || குதே பஸ்த்திமுகே நாப்யாம் குஹ்ய - வங்க்ஷணயோஸ்ததா | வ்ருக்கயோ : ப்லீன்ஹியக்ருதி-ஹ்ருதயே - க்ளோம்னிவாததா || தேஷாம்லிங்கானி ஜானீயாத் பாஹ்யவித்ரதி லக்ஷணே : || கடினமான ஜீர்ணம் ஆகாத ஆஹாரம்; ஒற்றுக்கொள்ளாததும் முரண்பட்டும் வரண்டுபேன ஆஹாரங்களை உட்கொள்வது, அதிக ஆண் பெண் சேர்க்கை அதிக உழைப்பு அல்லது சக்திக்கு மீறின அதிக உடற்பயிற்சி; மல மூத்திரங்களை அடக்குவது போன்ற இக்காலத்தில் சர்வசாதாரணமாக கடைபிடிக்கும் கரரணங்களால் அந்தர் வித்ரதி உண்டாகிறது. 'வல்மீகவத்-ஸமுன்னத்தம்'' என்றொரு வாக்யப்படி, புற்று போல், உயர்ந்து கட்டியாகக் காணப்படுவதாகவும், குதம் - மூத்திரப்பையின் முன்பாகம், தொப்புள், வயிறு, ஆண் பீஜங்கள் மூத்திரக்குண்டிக்காய், கல்லீரல், மண்ணீரல், ஹ்ருதயம் முதலிய இடங்களில் உண்டாவதாகவும் புற்றுநோய்க்குள்ளதுபோல் மேற்படி சுச்ருதர் வாக்கியத்திலிருந்து தெரிகிறது.

வித்ரதி சிகித்சையை சொல்லுமிடத்து ஸந்நிபாதஜ வித்ரதியைத்தவிர மற்ற ஐந்து பிரிவுகளும் ஸாத்யம் என்றும்; அந்த ஐந்து பிரிவுகளிலும் "சேஷஷ்வாமேஷு கர்த்தவ்யா த்வரிதம் சோபவத்க்ரியா'' என பழுத்து உடைவதற்கு முன்பே வீக்கம் வற்றுவதற்குள்ள சோபசிகித்சை செய்யவேண்டும் என்பது சுச்ருதரின் அபிப்ராயம். இதற்கான காரணத்தை வாக்படர் விளக்குவதாவது. " பாகம்ச வாரயேத் யத்னுத்-ஸித்தி: பக்வஹி ஹிதைவிகீ | அபிசாஸு விதாஹித்வாத் - வித்ரதி : ஸோ அபிதீயதே (அ- ஹி) கூடியவரை வித்ரதியைப் பழுக்காமல் தடுக்கவேண்டும். ஏனெனில் இந்தக் கட்டி சீக்கிரம் பழுக்கும் குணம் உள்ளது, அதனால் தான் வித்ரதி என இந்தக் கட்டியைக் கூறுகிறார்கள். அப்படிப் பழுக்கும் நிலையை அடைந்துவிட்டால் நன்கு பழுக்கச்செய்து சஸ்திரங்களால் கீரிப் பிளந்து சோதன ரோபண சிகித்சை செய்ய வேண்டும். ஆனால் புற்றுநோய்க்குள்ளதுபோல்; ஆழ்ந்து சஸ்த்ர சிகித்சையோ, தாஹசிகித்சையோ காணப்படவில்லை.

வித்ரதிக்குள்ள ஆசு விதாஹித்வம் புற்றுநோயில் இல்லை. ஆதலால் வித்ரதி என்றும் புற்றுநோயைச் சொல்ல இடமில்லை.

புற்று என்ற பதத்துக்கு ஸம்ஸ்க்ருதத்தில் வல்மீகம் என்று பெயர். இதன் நிதான லக்ஷணங்களைப் பார்ப்போம்.

"க்ரீவாம்ஸ கக்ஷா கரபாத தேசே-ஸந்தௌகளே வாத்ரிபிரேவ தோஷை: | க்ரந்தி: ஸவல்மீகவத் அக்ரியாணும் ஜாத: க்ரமேணவகத: ப்ரவ்ருத்திம் || முகைரனேகை: ஸ்ருதி-தோதவத்பி: விஸர்ப்பவத் ஸர்பதி சோன்னதாக்ரை: வல்மீகமாஹு: பிஷஜோவிகாரம் நிஷ்ப்ரதய நீகம் சிரஜம்-விசேஷாத் || (பாவப்ரகாசம்)

வாயு-பித்தம்-கபம் மூன்றும் கெட்டு கழுத்து, தோள்பட்டை, கை, கால்கள்; இவைகளின் ஸந்திகளிலும்-புற்றுபோல் கட்டி கிளம்பி அது சீக்கிரம்-சிகித்சை செய்யப்படாமல்போனால் நாளடைவில் அதிகம் ஆகி-பல முகங்களுடனும்; சீழ் ரத்தக்கசிவுடனும் தாங்க முடியாத வலியுடனும் சீக்கிரம் பரவிவிடும். இதற்கு வல்மீகம் (புற்று) என்று பெயர். நீண்ட நாளானது சிகிச்சைக்கு கட்டுப்படுவதில்லை. இது மேல் சொன்ன வாக்யத்தின் கருத்துமாகும்.

"சஸ்த்ரேண உத்க்ருத்ய வல்மீகம்-க்ஷாராக்னிப்யாம் ப்ரஸாதயேத் | விதானேன அர்புதோக்தேன சோதயித்வா சரோபயேத்|| என்ற பாவப்ரகாசக்காரர் சொல்படி-வல்மீகத்துக்கு இப்பொழுது புற்று நோய்க்குள்ளதுபோல் சஸ்திர சித்சை, தாஹசிகிக்சை, பின்பு அர்புதத்துக்குள்ள-சோதன-ரோபண சிகித்சைகள் காணப்படுகின்றன. இவ்விதமாக நிதான-லக்ஷண-சிகித்சைகளில் முழுவதும் ஒற்றுமை காணப்பட்டாலும்; உடலின் மேல்புறம் ஏதோ குறிப்பிட்ட ஒரு சில இடங்களில்-வருவதாக-வல்மீகத்தை-சொல்லுகிறார்களே தவிர உடலில் உட்புற்று அவயவங்களில் வருவதாக சிறிதளவும் கூறவில்லை. மேலும் இவ்வளவு ஒரு கம்பீரமான ஒரு நோயை மிகவும் சுருக்கமான நிதான லக்ஷண சிகிச்சைகளால் குறிப்பிடுவார்கள் எனதோன்றவில்லை ஆதலால் வல்மீகம் என்றும் சொல்ல இடமில்லை.

ஆக-இந்த புற்றுநோய் - சோதம்-க்ரந்தி - அர்புதம்-வித்ரதி-வல்மீகம்-இவைகளில் ஒன்றிலும் சேர்ந்தது அல்ல என்றால் எந்த நோயில் சேர்ந்தது. ஆயுர்வேத சாஸ்த்ர முறைப்படி எந்த நோய்க்காண சிகித்சை அனுசரிக்க வேண்டும் என்றொரு சந்தேகம் உண்டாகிறது.

---

# இடத்திற்கேற்ப வாயு காட்டும் குறிகள்

அளவுமீறி வளர்ந்த வாயு ஸ்தானம் பெயர்ந்து வெவ்வேறு இடங்களை அடையும்போது ஆங்காங்கு சில தனிப்பட்ட குறிகளை உண்டுபண்ணுகின்றது அந்தந்த இடங்களை யனுஸரித்தே வாயுவிற்கு சிகித்ஸைசெய்ய வேண்டிவருவதால் அவைகளை மனதிற்கொள்ளுதல் அவசியமாகின்றது

ஆமாசயம்: இங்கு ஏற்படும் வாயு பிரகோபத்தால் சுற்றி யுள்ள ஹிருதயம் தொப்புள், முதுகு, பக்கங்கள், அடிவயிறு இவை களில் வேதனை, வாந்தி, நாவரட்சி, ஏப்பம். இருமல், தொண்டை யில் வரட்சி, மற்ற முகத்திலுள்ள இந்திரியங்களிலும் வரட்சி, சுவாஸம் தலை சுற்றல், மயக்கம், இந்திரியங்களின் சக்திக்குறைவு, பேதி, ஹிருதயத்தில் அழுத்திப்பிடிப்பது போன்ற வலி, தொண்டை அடைப்பு, ரத்தபித்தம் மேனோக்குவது. இவைகள் ஏற்படுகின்றன.

பக்வாசயம்: இங்கு வாயுவின் பிரகோபம் ஏற்படின்—குடலில் இரைச்சல், தொப்புளில்வலி சிறுநீரும் மலமும் முக்கி வெளியா தல், வேதனையுடன் வயிற்றில் உப்புசம், மலபந்தம், பக்கங்கள், முதுகு திரிகு, (கழுத்தும் முதுகெலும்பும் தோளெலும்பும் சேரு மிடமும், இடுப்பெலுமபும் தொடை எலும்பும் சேருமிடமும்.) கணுக்கால், ஆடுசதை— இவைகளில் வலி, மலம் மூத்திரம் அபான வாயு இவை தடைப்பட்டு வெளியாதல், மூத்திரத்தில் சர்க்கரை, குடலிறக்கம், மூலம், கிருத்ரஸீ போன்ற இடுப்பிற்குக் கீழுள்ள பாகங்களில் ஏற்படும் வாதவியாதிகள் இவை ஏற்படுகின்றன.

ஞானேந்திரியங்கள்: ஞானேந்திரியங்களின் மூலஸ்தானத் தில் வாதப்பிரகோபம் ஏற்படின், அவைகளுக்குத் தன் தனது விஷயங்களில் சக்திக்குறைவு ஏற்பட்டு, தாற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ செவிடு குருடு முதலியவை ஏற்படலாம், பொது வாக வாத பிரகிருதியான மனிதனிடம் வாதப்ரகோபம் காரண மாக இந்திரிய மூலஸ்தானங்களில், வரட்சி மிகுந்து ரஸ ரக்த வாஹி சிரைகளில் சுருக்கமோ தடிப்போ, அடைப்போ ஏற்பட்டு அல்லது உணர்ச்சியைத் தாங்கிச்செல்லும் நரம்புகளில் ஊனம் ஏற்பட்டு இந்திரியநாசம் ஏற்படுவது ஸஹஜம்.

கோஷ்டம்: வயிற்றிலும் மார்பிலும் ஏற்படும் வாத பிரகோ பத்தில் மூத்ர மலக்கட்டு, அண்டவீக்கம், குடலிறக்கம், ஹிருதய ரோகங்கள், குல்மம், அர்சஸ், பக்கசூலம் இவை ஏற்படுகின்றன.

குதம் : ஆஸன வாய்க்கு சமீபத்திலுள்ள குடலின் கடைசி பாகத்தில் ஏற்படும் வாதபிரகோபத்தில், மல-மூத்ரக்கட்டு, வாயு பிரியாமை, வயிற்றில் வலி, பொருமல். மூத்திரத்தில் கல் இரும்பு, கீழ்திருகு- கண்டைக்கால், பாதம் இவைகளில் வலியும் வரட்சியும், இடுப்புப்பிடிப்பு, மூச்சுத்திணறல் இவைகள் ஏற்படுகின்றன. பொதுவாகக் கோஷ்டாங்கங்களில் (வயிறு—மார்புஸ்தானத்தில் உள்ள அங்கங்களில்) எவ்விடத்தில் நோய் ஏற்பட்டாலும், முன் கூறிய குறிகள் காணப்படும். அதனால் வயிற்றில் ஏற்படும் வாயுவின் தொந்தரவு ஹிருதயத்திலும் பிரதிபலித்து மயக்கம் கண்ணிருண்டுவருதல், மூர்ச்சை போன்ற நிலைகள் ஹிருதயத்தில் வலி முதலியவைகளும் ஏற்படுவதுண்டு. ஹிருதயத்தில் ஏற்படும் வேதனைக்குப் பல சமயத்தில் உதரவாயு காரணமாவதை வைத்யன் அனுபவத்தில் காணலாம்.

ஸதராது—தோல்— இவைகளில் ஏற்படும் வாதகோபத்தில் தோலில் வரட்சி, தோல்வெடிப்பு, மதமதப்பு உணர்ச்சியற்றுப் போதல், கருத்தோ சிவந்தோ காணுதல், இழுப்பது போன்ற உணர்ச்சி, குத்துவலி எறும்பு ஊர்வது போன்ற குறுகுறுப்பு, துடிப்பு, தோல் உரிதல், வலி இவைகள் ஏற்படுகின்றன.

ரக்ததாது — ரத்ததாதுவில் ஏற்படும் வாத பிரகோபத்தில், கடும்வலி, எரிச்சல், நிறம் மங்கி மாறுதல், இளைத்தல், அரோசகம், சிரங்கு, சினப்புகள், சாப்பிட்டவுடன் சரீரம் ஸ்தம்பித்துப் போதல் இவை ஏற்படும்.

மாம்ஸம்-மேதஸ் — இவைகளில் ஏற்படும் வாதகோபத்தில் உடல் கனத்தல், தேக அசைவுகளில் வேதனை அல்லது தேக அசைவுகள் குறைதல், குத்துவலி, கைமுஷ்டியால் குத்துப்பட்டது போன்றவலி, சிரமம் இவைகள் ஏற்படும். மாம்ஸத்தில் வலியுடன் கூடிய கடினமான கிரந்திகள் (முடிச்சு) ஏற்படும். மேதஸ்ஸில் வலி குறைந்த, விரண மில்லாத முடிச்சுகள் ஏற்படும். இவைகளை அக்குள், கழுத்தின்மேல் புறம் கன்னம் தாடைகளின் கீழ்புறம் முதலிய மேதஸ் தங்கும் இடங்களில் காணலாம்.

அஸ்தி— மஜ்ஜா — எலும்புகளில் வாயு கோபம் ஏற்பட, எலும்புகள் வரண்டு வளர்ச்சி குன்றிப் போதல், எலும்புகளில் குத்துவலி, பிளப்பது போன்றவலி, துடையெலும்புகளில் வலி, அதிகமான பலக்ஷயம் இவை காணும், எலும்புக்குள்ளிருக்கும் தாதுவான மஜ்ஜையில் கோபம் ஏற்பட அது வரண்டு போகும். எப்பொழுதும் உள்ளே வலி, வலிமிகுதியால் தூக்கமின்மை, எலும்பு

கனமின்றி லேசாகி உள் ஒட்டை விழுதல் இவை ஏற்படும். இவ்விரண்டின் குறிகளும் பொதுவாக ஒரே விதமே.

**சுக்ரம்:** இதில் ஏற்படும் வாத கோபத்தில், சுக்லம் மைதுன காலத்தில் வெளியாகாது. அல்லது கோபத்திற்கேற்ப சீக்கிரமே வெளியாகலாம். முடிச்சு முடிச்சாக சுக்ரம் காணப்படுவதுடன், கர்ப்பாசயங்களில் சீர்கேடு இவையும் காணப்படும்.

**தசை நார் – ஸ்நாயு;** தசை நார்களில் ஏற்படும் வாத கோபத்தில் உடல் உட்புறமாகச் சுருங்கி, கூனல் போன்று வளைதல், அல்லது வெளிப்பக்கம் வளைதல், இடுப்புப்பிடிப்பு, கைப்பிடிப்பு, கால் பிடிப்பு, நொண்டியாதல், சரீரத்தில் ஓரங்கமோ எல்லா அங்கங்களும் பழுதடைதல், உதரல், குத்துவலி, வலிப்பு இவை ஏற்படும்.

**ரக்த சிரைகள்:** இவைகளில் ஏற்படும் வாத கோபத்தில் வலி, சிரைகள் வளைந்து சுருண்டிருத்தல், சிரைகள் உப்பியோ, மெல்லியதாகவோ காணப்படுதல், சிரைகளில் இரத்த ஓட்டக் குறைவு உடலில் வறட்சி இவை முக்கிய காரணம்.

**ஸந்தி:** சந்திகளில் வீக்கம், சந்தி நழுவுதல், குத்துவலி, சந்திகளில் அசைவின்மை, நீட்ட-மடக்க முடியாதிருத்தல், அல்லது நீட்டி மடக்கும்போது வலி ஏற்படுதல் இவைகள் ஏற்படும்.

---

## 1973 சந்தாவை அனுப்பவும்

*31–8–73*-க்குள் சந்தா அனுப்பாதவர்கட்கு, ஸெப்டம்பர் மாத வைத்திய சந்திரிகை வி. பி. பி. யில் அனுப்பிவைக்கப்பெறும் என தெரிவித்துக்கொள்ளுகிறோம். அதிகச் செலவைத் தவிர்க்க உடன் சந்தாத்தொகை ரூ. 5/-ஐ உடன் அனுப்பிவைக்கக் கோருகிறோம்.

**A. ராகவராவ்,**
கார்யதரிசி.
தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலம்,
சின்னக்கடைத்தெரு, திருச்சி-2.

---

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.,

MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

FOR PURE MUSK, KASHMIR SAFFRON,
GOROCHAN & INDIAN CRUDE DRUGS

WRITE TO

# M|s. Kalia Brothers (Regd.)

**Wholesale Musk & Indian Drugs Merchants,**

JULLUNDUR CITY (PUNJAB)

**Gram: KALIA** Phone: **Office - 3232**
**Resi. - 4343**

சுத்தமான கஸ்தூரி, காஷ்மீர் குங்குமப்பூ,
கோரோசனை மற்றும் மருந்து சரக்குகட்கு
அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

# கலியா பிரதர்ஸ் [ரிஜிஸ்டர்ட்]

கஸ்தூரி மருந்து சரக்கு மொத்த வியாபாரி,
ஜல்லந்தர் ஸிடி (பஞ்சாப்).

தந்தி: KALIA போன்: ஆபீஸ் – 3232
வீடு – 4343

தந்தி : " அம்ருதம் "  P, B. No. 1382.  போன் : 26006

# தி ஆர்ய வைத்திய பார்மஸி

## (கோயமுத்தூர்) லிமிடெட்

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.

THE ARYA VAIDYA PHARMACY (COIMBATORE) LTD. AVP

**உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்**

எங்களுடைய கிளைகள் :

| | | | |
|---|---|---|---|
| 1. | 23-B, பூஸா ரோடு, புது டில்லி-5 | போன் : | 585687 |
| 2. | மொய்தீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1 | ,, | 2984 |
| 3. | கௌடியா மடத்தெரு, மதராஸ்-14 | ,, | 85752 |
| 4. | வளிஞ்ஞம்பலம், எர்ணுகுளம், கொச்சின்-16 | ,, | 32336 |
| 5. | பிள்ளையார் கோயில் ரோடு, கண்ணனூர்-1 | ,, | 92 |
| 6. | மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1 | ,, | 195 |
| 7. | கடைவீதி, பொன்னானி | ,, | 41 |
| 8. | ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1. | ,, | 738 |
| 9. | கோர்ட் ரோடு, ஆலத்தூர் | ,, | 87 |
| 10 | மெயின் ரோடு, கஞ்சிக்கோடு | | |
| 11. | ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18 | | 33758 |
| 12. | இந்திரா பில்டிங், கள்ளிக்கோட்டை-2 | ,, | 4891 |
| 13. | T. T. 384 K. டெலிச்சேரி ரோடு, கண்ணனூர்-2 | | 842 |
| 14. | No. 263, 64. 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னானி) | | 31 |
| 15. | ஹல்வா பஜார் ரோடு, கள்ளிக்கோட்டை-1 | | |

பாக்டரி :
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

நர்ஸிங் ஹோம் :
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18
(போன் ; 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V. ராம வாரியார்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

வாரியர்

# க்ஷீரபலா 101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும், மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்துவந்தால் வாத ரோகங்களும் விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00 12 ML. ரூ. 3-75

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனுபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது].

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன்
## பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம் 1939)

விற்பனை அண்டு ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்
31-A, சின்னகடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி–2.
போன் எண் : 4202

## சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு முப்பத்திமூன்று ஆண்டுகளாக பிரஸித்தமான இடம்.

பிரஸவித்த மாதர்கட்கு:

### ஸௌபாக்கிய ரஸாயனம்

ஜீர்ண சக்தி, ரத்தவிருத்தி அளிக்கும் சிறந்த லேஹியம்,
300 கிராம் பாட்டில் ரூ. 5.

### பயஸ்யா

தாய்ப்பாலை வளர்க்கும் திவ்ய ரஸாயன லேஹியம்.
300 கிராம் பாட்டில் ரூ. 5–50
— தபால் செலவு தனி —

சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்களின் மேற்பார்வையில்
தயாரிக்கப்பெற்ற
மற்ற எல்லா ஆயுர்வேத மருந்துகளும்
இங்கு கிடைக்கும்.

வைத்தியர்களுக்கும் பொதுமக்களுக்கும்
— மிகவும் நம்பிக்கையான இடம் —

T. S. ஈச்வரன், L.I.M.
மானேஜிங் டைரெக்டர்.

## இம்ப்காப்ஸ்

## புராதன பாரம்பரியத்துடன் நவீன தொழில் நுட்பமும் இணைந்து நிற்கும் நிறுவனம்.



இம்ப்காப்ஸ் இந்திய மருத்துவர்களின் இணையில்லாத ஒரு கூட்டுறவு நிறுவனம். புராதன நூல்களில் கூறியுள்ள முறைகள், தரங்களை கண்டிப்பான முறையில் பின்பற்றி ஆயுர்வேத, சித்த, யூனானி மருந்துகளை அது தயாரித்து வருகிறது. மருந்துகளை தயாரிக்கும் ஒவ்வொரு கட்டத்திலும் அதிக கடுமையான முறையில் தரப் பரிசோதனை செய்யப்படுகிறது. புராதன மருந்துகளை தயாரிப்பதில் நவீன பாககிங் முறைகளையும் இயந்திரங்களையும் இம்ப்காப்ஸ் பயன்படுத்தி வருகிறது. சுதேச மூலிகைகள் பற்றிய இடைவிடாத ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இம்ப்காப்ஸ் புராதன இந்திய மருந்துகள் சம்பந்தமாக ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கப் பாடுபடுகிறது.

impcops

**உண்மையான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளுக்கு பெயர் பெற்ற நிறுவனம்**

இம்ப்காப்ஸ் மருந்துகள் எல்லா முக்கிய மருந்து கடைகளிலும் கிடைக்கும்

**இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.**

அடையார், சென்னை 20.

**விற்பனை நிலையங்கள்:** 4/86, மவுண்ட் ரோடு, சென்னை-2. போன்: 8652

48, சொத் மாஸி தெரு, மதுரை. போன்: 30875

16, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14.

maa/IMP/961/M TAM

VAIDYA CHANDRIKA AUGUST 1973 Regd. No. M. 4018

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்டகால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கைகண்ட பலனளிக்கும்

# "சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைகட்டிகளை

எந்நிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

## சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர் (S. Ry.)

Edited and published by Dr. T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2
Printed at Githa Press, Tiruchirapalli-2.